# ஸ்ரீ சக்ரா

மனிதகுலத்தில் ஒவ்வொருவருக்கும் ஆன்மீகம் பற்றி வெவ்வேறு விதமான புரிதலும் வேறுப்பட்ட உணர்வு நிலைகளும் இருக்க, உருவழிப்பாட்டிலும் ஆயிரம் குழப்பங்கள் தொடர்ந்து வருகிறது. அனைவருக்கும் ஏற்றாற்போல் கடவுளை எளிமையாக உருவகப்படுத்தி, முறையாக நாம் பயன்படுத்தும் கருவியே "ஸ்ரீ எந்திரம்" என்றைழக்கப்படும் "ஸ்ரீ சக்கரம்".

எந்திரம் என்ற சொல்லுக்கு கருவி என்ற அர்த்தமும் உண்டு. இறைசக்தியை இதுபோன்ற எந்திரங்களில் சேகரித்து பயன்பெறுவது சாத்தியம்.

ஸ்ரீ சக்கரம் பல வடிவங்களால் ஆனது. முக்கோணங்கள், கோடுகள், வட்டங்கள் மற்றும் சதுரங்களால் வடிவமைக்கபட்டது. இவ்வகை அமைப்புக்கு அறிவியல் ரீதியாகவும் பலர் முன்மொழிந்திருக்கிறார்கள்.

ஒன்பது முக்கோணங்கள் ஒன்றுக்கொன்று குறுக்கே பிணைந்து நாற்பத்து மூன்று சிறிய முக்கோணங்களாய் தெரியும். இந்த முக்கோணங்கள் எல்லாம் இரு வட்டங்கக்குள், எட்டு மற்றும் பதினாறு இதழ்களோடு பொருந்தி இருக்கும். பிரபஞ்சத்திற்கு முதலும் இல்லை முடிவும் இல்லை என்பதையே இந்த வட்டங்கள் குறிக்கிறது. இந்த கட்டமைப்பு மொத்தமும் ஒரு சதுரத்துக்குள் அமைந்திருக்கும். சதுரத்தின் நான்கு பக்கத்திலும் உள்ள வாசல் போன்ற அமைப்பு, நமக்கும் பிரபஞ்சத்திற்கும் இடையே உண்டான நுழைவாயல் என்று கருதப்படுகிறது.

கோவில்களில் கர்ப்பக்கிரக்கத்தில் பிரதிஷ்டை செய்த மூலவருக்கு இருக்கும் இணையான சக்தி, இந்த ஸ்ரீ சக்கரத்திற்க்கும் உண்டு என்பார்கள். ஸ்ரீ சக்கரத்தை நோக்கி நம் தேடல் செல்லுகையில் இன்னும் பல சுவாரஸ்யமான தகவல்களை நாம் கடப்பது திண்ணம்.

ஸ்ரீ சக்கரம் – வெறும் கற்பனை சக்தி கொண்டு வரைந்திட்ட ஓவியம் இல்லை. கற்பனைக்கும் எட்டாத பல விந்தைகளை உட்கொண்டிருக்கும் இந்த எந்திரத்திற்கும் இணை இல்லை!